**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை:- திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2022ம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 18 -ம் நாள் வியாழக்கிழமை.

**அசல் வழக்கு எண் - 72/2008**

சாத்தான்விளை ஊர் பிரதிநிதியாக
அதன்தலைவர் எஸ்.வி.எஸ். கணேசன். .....வாதி

-எதிர்-

முட்டம் பஞ்சாயத்து எதிர் பிரதிநிதியாக
அதன் தலைவர், N. ராஜ், முட்டம் ......பிரிதிவாதி

இவ்வழக்கானது, 17.08.2022 அன்று இந்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ரத்தினசாமி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஐசக் ஜவஹர்லால் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரை, அசல் வழக்கு கோப்பு, விசாரிக்கப்பட்ட சாட்சி, குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, விசாரிக்கப்பட்ட சாட்சி, குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**1.** இவ்வழக்கானது, வாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 1908 கீழ், பிரிவு - 26 மற்றும் கட்டளை VII விதி 1 மற்றும் கட்டளை 1 விதி 8 ன் படி, விளம்புகை பரிகாரம் கோரி, இந்த வழக்கினை தாக்கல் செய்வதாக வாதி தெரிவிக்கிறார்.

**2. வாதி வழக்கின் சுருக்கம்:**

வாதியானவர் சாத்தான்விளை ஊர் சார்பாக அதன் தலைவர் என்கின்ற அதிகாரத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதியாக முட்டம் பஞ்சாயத்து சார்பாக அதன் தலைவரை தரப்பினராக கட்சி சேர்த்துள்ளார். வாதியின் வழக்கு யாதெனில் சாத்தன்விளை கிராமம் சுமார் 350 வீடுகள் கொண்ட கிராமம் என்றும் 2000 நபர்களுக்கும் மேலாக மக்கள் தொகை கொண்ட கிராமம் என்றும் அதைச் சுற்றி பல கிராமங்கள் உள்ளதென்றும் வாதி கிராமத்திலிருந்து சுமார் 3 கீ.மீ. தொலைவில் முட்டம் கிராமம் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கிறார்.

**3.** மேற்சொன்ன முட்டம் கிராமத்திற்கு வள்ளியாறு ஆற்றிலிருந்து தொடர்ந்து குடிநீர் விநியோகிக்கப்படுகிறதென்றும் மேலும் அவர்கள் குடிநீர் தேவைக்காக முட்டம் கிராமத்திலிருந்து அரை கி.மீ. தொலைவில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதென்றும் கூடுதலாக ஆழ்துளை கிணறுகள் அமைப்பதால் நிலத்தடி நீரின் அளவு குறைந்துவிட்டதென்றும் இவ்வாறு முட்டம் கிராமத்தில் தொடர்ந்து செய்து வருவரால் வாதி கிராமத்திற்கு நீராதாரம் மெல்ல மெல்ல குறைந்து வருகிறதென்றும் இது தொடரும்பட்சத்தில் வாதி கிராமம் நீரின்றி வற்றிவிடக்கூடிய சூழ்நிலை உருவாகும் என தெரிவிக்கிறார்.

**4.** இப்பிரச்சினை சம்பந்தமாக பல்வேறு சர்ச்சைகள் உருவாகி வாதி கிராமம் மற்றும் பிரதிவாதி கிராமத்திற்கிடையே பிரச்சனை மூண்டதால் அமைதி குழு ஒன்று

அமைக்கப்பட்டு பல்வேறு நிபந்தனைகள் நியமிக்கப்பட்டதென்றும் அவற்றில் புதிதாக ஆழ்துளை கிணறு தோண்டும் பட்சத்தில் பழுதானவற்றை மூடுவது என்றும் அதன் அளவுகோலே தொடரும் என்றும் 240 அடிக்கு மிகாமல் தோண்டுவதென்றும் சாத்தான்விளை ஆற்றங்கரையில் புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைப்பதில்லை என தீர்மானித்தாக தெரிவிக்கிறார். இந்நிலையில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்க பிரதிவாதி முயற்ச்சிப்பதால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதாக தெரிவிக்கிறார்.

**5. <u>பிரதிவாதி தரப்பு எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதி இவ்வழக்கை முற்றிலுமாக மறுத்து கடியப்பட்டிணம் கடல் பகுதியில் சுனாமி பாதிப்பினால் குடிநீர் ஆதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதென்றும் ஆதலால் குடிநீர் ஆதாரத்திற்காக வெறும் 720 மீ நீளத்திற்கு மட்டுமே பைப் லைன் அமைக்கப்படுகிறதென்றும் நமக்கு நாமே திட்டத்தின்படி தான் சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடமிருந்து அனுமதி பெற்று 2 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டது. அதற்கான கட்டமைப்பும் பகுதியாக நிறைவேற்றப்பட்டுவிட்டதென்றும் வாதி தெரிவிப்பது போல் ஆறு போர்வெல் இல்லை என தெரிவிக்கிறார்.

**6**. அமைதி குழு தீர்மானத்தினால் எந்த உபயோகமும் இல்லை என்றும் பிரதிவாதி கிராமம் சுனாமியால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் இக்குடிநீர் திட்டத்தினை உடனடியாக நிறைவேற்ற தமிழ்நாடு அரசாங்கம் பிரதிவாதி பஞ்சாயத்தினை வலியுறுத்தியதாகவும் பிரதிவாதி கிராமத்தில 20,000 பேர் உள்ளார்கள் என்றும் அவர்கள் தண்ணீர் இன்றி தவிப்பார்கள் என்றும் தெரிவிக்கிறார்.

**7.** வாதி கூறுவதுபோல் புதிதாக ஆழ்துளை கிணறு எதுவும் தோண்டப்படவில்லை என்றும் எற்கெனவே 2 ஆழ்துளை கிணறுகள் தோண்டப்பட்டுவிட்டதென்றும் வாதியின் வழக்கிற்கு வியாஜ்ஜியம் மூலம் இல்லை

என்றும் பிரதிவாதி பஞ்சாயத்திற்கு வழக்கறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றும் இந்த வாதியால் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்பட்டதென்றும், வீ. டி. செல்லம் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு நிலுவையில் உள்ளதாகவும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என வேண்டுகிறார்.

**8.** வாதி தாக்கல் செய்துள்ள பிராது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை, நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை ஆகியவற்றை பரிசீலித்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1. வாதி கோரியுள்ளபடி பிரதிவாதி ஆழ் குழாய் கிணற்றினை மேலும் ஆழ்ப்படுத்துவதை தடுக்கும் வண்ணம் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலுமா?
2. வாதிஇந்த வழக்கில் அரசாங்கத்தை கட்சி சேர்க்காமல் வழக்கு செய்வதால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?
3. வேறு இதர பரிகாரங்கள் என்ன வழங்கலாம்?

இந்த வழக்கில் நிலுவையில் இருந்தபோது பிரதிவாதி ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி அளிக்கப்பட்டு எழுவினாக்கள் வனையப்பட்டு தகுதியின் அடிப்படையில் இவ்வழக்கினை தீர்மானிக்க வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்திற்காக இந்த நீதிமன்றம் உத்தரவு இட்டது.

**9.** வாதி தரப்பில் வாதி கணேசன் வாதி தரப்பு சாட்சியம் 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை C.1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பிற்கு போதிய அவகாசம் வழங்கியும் வாதி தரப்பு

சாட்சியத்தினை குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை. இவ்வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை முன்பாக C.R.P.P.D.(MD) No.1097 of 2013 சீராய்வு மனு நிலுவையில் இருந்து கடந்த 09.06.2015 ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதியும் மேற்சொன்ன சீராய்வு மனுவில் பங்கேற்று வழக்கு நடத்தியுள்ளார். இந்த கீழமை நீதிமன்றத்தால் பல்வேறு தேதிகளில் வாய்ப்பளிக்கப்பட்டும் பிரதிவாதி வாதி சாட்சியினை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் வாய்ப்பு முடித்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்ப்பளிக்கப்பட்டது.

**10.** பிரதிவாதி தரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பதிவு செய்ய முன்வராததால் வாய்ப்பு முடித்து வைக்கப்பட்டு இரு தரப்பு வாதங்களை இந்நீதிமன்றம் கோரியது.

**11.** வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே. ரத்தினசாமி அவர்கள் பிரதிவாதிகளுக்கு வள்ளியாறு ஆற்றிலிருந்து போதிய அளவு குடிநீர் விநியோகிக்கப்படுகிறதென்றும் பிரதிவாதி பஞ்சாயத்து தலைவரின் தனிப்பட்ட விரோதம் காரணமாகத்தான் வேண்டுமென்றே ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்படுகிறதென்றும் தற்சமயம் கூட்டு குடிநீர் திட்டப்படி பிரதிவாதி பஞ்சாயத்திற்கு குடிநீர் விநியோகம் அதிகளவில் உள்ளதென்றம் நீராதாரத்தை காப்பாற்றும் பொருட்டு தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதென்றம் நீதிமன்றம் தலையிட்டு வாதி கிராம மக்களின் குடிநீர் தேவையை காப்பாற்ற வேண்டும் என வாதிட்டார். பிரதிவாதி தரப்பில் தங்கள் தரப்பு வாதத்தை எடுத்துரைக்க முன்வராததால் இந்நீதிமன்றம் பதிவு செய்யப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் மற்றும் சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் இந்த வழக்கினை தீர்மானிக்கின்றது.

**12. <u>எழுவினா 1 மற்றம் 2</u>**

வாதி பிரதிவாதி பஞ்சாயத்திற்கு எதிராக கோரியுள்ள இந்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலுமா? தமிழ்நாடு அரசாங்கத்தை சட்சி சேர்க்காத காரணத்தினால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா? என பரிசீலிக்கும் போது வாதி தரப்பில் தங்கள் தரப்பு முதல் சாட்சியத்தை நிரூபணவாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளனர். வாதியின் சாட்சியத்தின்படி பிரதிவாதி பஞ்சாயத்து ஆழ்துளை கிணறு அமைத்து நீர் உறிஞ்சுவதால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைகிறதென்றும் 2 ஆழ்துளை கிணறுகளுக்கிடையே 600 மீ தொலைவு இடைவெளி இருக்கவெண்டும் என்ற விதி இருக்கும்போது அவற்றை எதையும் பின்பற்றாமல் பிரதிவாதி பஞ்சாயத்தில் போர்வேல் அமைப்பதால் வாதி கிராமத்தை வெகுவாக பாதிக்கும் என தெரிவிக்கிறார்.

**13.** வெள்ளிமலை பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதியில் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட வெள்ளிமலை பேரூராட்சியிடமிருந்து பிரதிவாதி பஞ்சாயத்து அனுமதி எதுவும் பெறவில்லை என தெரிவிக்கிறார். வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கையின் படி வெள்ளிமலை பேரூராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணற்றிலிருந்து சுமார் 500 மீ தொலைவிற்குள் பிரதிவாதி பஞ்சாய்த்து ஆழ்துளை கிணறு அமைப்பதால் வாதி கிராமம் வறட்சி அடையும் சூழ்நிலை ஏற்படும் என்றும் பிரதிவாதி தெரிவிப்பதுபோல் ஆழ்துளை கிணறு அமைக்கப்படவில்லை என்றும் தொடங்கும் சமயத்தில் வாதி ஊர் மக்கள் போராட்டம் செய்து தடுத்து விட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

**14.** வாதி தரப்பில் வாதி ஊர் மக்கள் சார்பாக மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய கடிதம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டது. அக்கடிதத்தில் ஆழ்துளை கிணறு

அமைப்பதை தடுப்பது என கோரிக்கை விடுத்தனர். வாதி சுற்று வட்டார கிராம மக்களின் கூட்டமைப்பு மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழக முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதம் வா.சா.ஆ. 2 குறியீடு செய்யப்படுகிறது. 20.02.2008 தேதியிட்ட வெள்ளிமலை ஊராட்சி தலைவரின் கடிதம் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசாங்க பொதுப்பணித்துறை வெளியிட்ட விழிப்புணர்ச்சி தகவல் ஏடு வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாத்தான்விளை பகுதி மற்றும் இலையான்விளை பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகள் பற்றிய விவரங்கள் வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**15.** வாதி கோரியுள்ளபடி பிரதிவாதிகள் தரப்பில் பஞ்சாயத்து அமைக்கும் ஆழ்துளை கிணறு வாதி கிராமத்தினை பாதிக்கும் வண்ணம் உள்ளதா விதிமீறல்கள் உள்ளதா என காணும்பொழுது இந்த நீதிமன்றம் வா.சா.ஆ. 4 ஆவணத்தை கவனமாக பரிசீலித்த பொழுது தமிழ்நாடு அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின் படி 2 அதிகமான ஆழமான குழாய் கிணறுகளுக்கிடையே 600 மீ இடைவெளி இருக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

**16.** வா.தா.சா.5 ஆவணத்தை பார்வையிடும் போது வாதி கிராமத்தில் அமைந்து ஆழதுளை கிணறுகள் பற்றிய விவரப்பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் மொத்த எண்ணிக்கையான 54 கிணறுகளில் தண்ணீர் உள்ளவை வெறும் 19 மட்டுமே. சூழ்நிலை இவ்வாறு இருக்கும்பொழுது வள்ளியாற்றிலிருந்து தொடர்ந்து குடிநீர் ஆதாரம் வெற்றுவரும் பிரதிவாதி கிராமம் மீண்டும் வாதி கிராம ஆற்றங்கரையில் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்காக வாதிகளுக்கு பாதிப்புகள் ஏற்படுத்துவதோடு கூடி தமிழ்நாடு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளை மீறியுள்ளனர் என்பது ஆவண ரீதியாக தெரியவருகிறது.

**17.** வா.சா.ஆ. 3 ஆவணம் என்பது வெள்ளிமலை பேரூராட்சி தலைவர் அவர்களால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் ஏற்கெனவே பயன்பாட்டில் பல ஆழ்துளை கிணறுகள் வாதி கிராம பஞ்சாயத்தில் பயனற்று இருப்பதாக தெரிவித்து கடியப்பட்டிணம் ஊரைச் சார்ந்தவர்கள் வாதி கிராம ஆற்றங்கரையில் ஆழ்குழாய் கிணறு அமைத்து நீர் எடுத்து செல்ல முயற்சிப்பதை குறித்து மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். தமிழ்நாடு அரசாங்கம் கடந்த 18.02.2015-ம் தேதி G.O.MS.No.26 ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அரசாணை ஒன்று வெளியிட்டுள்ளது. அந்த அரசாணையின் படி ஆழ்துளை கிணறுகள் குறித்த பாதுகாப்பினை மாவட்ட ஆட்சியர் கண்காணிக்க வேண்டுமென்றும் அது குறித்த பதிவேடுகள் பராமரிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**18.** வா.சா.ஆ. 3 ஆவணத்தின்படி கடிதத்தை பெற்று மாவட்ட ஆட்சியர் அது குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளார் என இந்த நீதிமன்றம் பரிசீலிக்கும் பொழுது இந்நீதிமன்றம்முன்பாக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதும் இல்லை என்றாலும் பொதுப்பணித்துறை செயல் பொறியாளருக்கு கல்குளம் வட்டாட்சியர் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தின்படி புல எண். 380 மற்றும் 381 புல பூமிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கான முன்னெடுப்புகள் தான் நடைபெற்றுள்ளது நிருபணமாகியுள்ளது. பிரதிவாதி தமது எதிர்வழக்குரையில்

தெரிவித்திருப்பதுபோல் ஆழ்துளை கிணறுகள் எதுவும் அமைக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

**19.** வாதி கிராமத்தின் குடிநீர் ஆதாரத்தினை காப்பாற்றம் பொருட்டு வாதி கிராமத்தினை நிர்வகிக்கக் கூடிய வெள்ளிமலை பேரூராட்சியின் தலைவர் அதிகாரப்பூர்வமாக கடிதம் எழுதியுள்ளார். சூழ்நிலையின் வீரியம் வாதி கிராமத்தினை பாதிக்கும் வண்ணம் இருப்பதால் தான் அவர் எழுதியுள்ளார் என்பதும் பிரதிவாதி பஞ்சாயத்திற்கு எவ்வாறு நீர் தேவைப்படுகிறதோ அதே அளவுகோலில் தான் வாதி கிராமத்திற்கான நீர் ஆதாரத்தையும் காப்பாற்றும் கடமை அரசாங்கத்திற்கும் உள்ளது. இச்சூழ்நிலையில் வாதியின் கிராமத்திற்கான குடிநீர் ஆதாரத்தை பாதுகாக்க இந்த நீதிமன்றத்தை வாதி கிராமம் அனுகியுள்ளதால் இந்த நீதிமன்றம் பொருண்மை நிலைபாட்டின் படியும் சட்ட நிலைபாட்டின் படியும் வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தினை வாதிக்கு வழங்கி பிரதிவாதி கிராம பஞ்சாயத்து வாதி கிராம ஆற்றங்கரையில் ஆழ்துளை கிணறு அமைக்கக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்து எழுவினா 1 க்கு விடை காண்கின்றது.

**20.** வாதி கிராமத்திற்கு உட்பட்ட ஆற்றங்கரையில் ஆழ்துளை கிணறு அமைக்க முயற்சித்த பிரதிவாதி கிராமத்தினை முறையாக கட்சி சேர்த்திருப்பதால் வாதி அரசாங்கத்தினை இந்த வழக்கில் சட்சி சேர்க்காததால் பாதிப்பு ஏதும் இல்லை என தீர்மானித்து எழுவினா 2 ற்கு தீர்வு காண்கின்றது. தற்சமயம் பிரதிவாதி கிராமத்திற்கு

கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் நீராதாரம் ஏற்படுத்தப்பட்டு விட்டபடியால் தற்சமயம் ஆழ்துளை அமைப்பதற்கு முன்னெடுப்புகள் எதுவும் நடைபெறவில்லையென வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடியால் வாதி கிராமத்திற்கு வேற பரிகாரம் வழங்க வேண்டிய அவசியம் இல்லை என எழுவினா 3 ற்கு தீர்வு காண்கின்றது.

21. இந்த வழக்கில் இறுதி தீர்வு காணும் முன்பு நிலத்தடி நீர் சம்பந்தமாக தமிழ்நாடு அரசாங்கம் பல்வேறு அரசாணைகளைப் பிறப்பித்துள்ளது. பல்வேறு வழிக்காட்டுதல்களையும் பிறப்பித்துள்ளது அவற்றில் சிலவற்றை தீர்ப்பின் தேவை கருதி இந்த நீதிமன்றம் இங்கு பதிவு செய்கின்றது. அவை கீழ் வருமாறு. கீழே விவரிக்கப்பட்டுள்ள அரசாணைகளின் படி நிலத்தடி நீர் குறித்து கிராம வாரியாக வகைப்படுத்தப்பட்டு ஆழ்துளை கிணறுகள் அமைப்பது குறித்து பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கிற்கு அரசாணைகள் நேரடியாக பொறுந்துவதால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

In view of the acute shortage of water in the entire State of Tamil Nadu, the Government has issued G.O.Ms.No.51, Public Works Department, dated 11.2.2004 , G.O.Ms.No.52, Public Works (R2) Department, http://www.judis.nic.in dated 02.03.2012 and G.O.(Ms).No.142, Public Works (R2) Department dated 23.07.2014, for regulating the extraction of ground water. The said Government orders are being extracted and they read as under:-

i. G.O.(Ms).No.51, Public Works (R2) Department dated 11.02.2004 reads thus.

"GOVERNMENT OF TAMIL NADU ABSTRACT Ground Water - Estimation of ground water resources as per GEC Methodology 1997 -

Categorization of Panchayat Union blocks as Over Exploited, Critical, Semi critical and Safe for Ground Water Development in Tamil Nadu - Approved - Orders issued.

Public Works (R2) Department

G.O. (Ms) No. 51

Dated: 11.2.2004.

Read:

1. G.O. (2D) No. 326 Public Works Department dated.23.11.1993.

2. G.O. (D) No. 457 Public Works Department dated 1.10.1996

3. G.O. (Ms) No.117 Energy (C1) Department dated 13.6.1997

4. Letter No. 29404/R2/2000-1 Public Works Department dated 26.7.2000

5. Letter Ms.No. 141 Energy Department dated. 26.7.2000 Read also:

6. From the Member (SAM), CGWB, New Delhi Letter No.3-4/ RESCGWB

M(SAM) 2001-1223 dated.17.6.03 addressed to Chief Engineer (State Ground and Surface Water Resources Data Center)

7. From the Chief Engineer (State Ground and Surface Water Resources Data Center) Letter No. G1/8474/Assessment/2003/1.9.2003.

8. From the Member Secretary, State Planning Commission Letter No.3360/State Planning Commission/APP/2003/21.10.2003.

9. From the Chief Engineer (State Ground and Surface Water Resources Data Center) Letter No.G1/8474/Assessment/2003 dated 29.1.04 and 6.2.04.

**22.** இறுதியாக**,**

தாவா சொத்தில் பிரதிவாதி கிராம பஞ்சாயத்து ஆழ்துளை கிணறு அமைக்க முயற்சிக்க கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்து வாதியின் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டசருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2022 - ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

1. <u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி **- 1**</u>

வா.சா.சா.1 - S.V.S. கணேசன் ( வாதி )

2. <u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் **- 6**</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 01.02.2008 | வாதியால் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்படப்பட்ட கடிதத்தின் நகல் | நகல் |
| 2. | வா.சா.ஆ.2 | 24.04.2008 | வெள்ளிமலை பேரூராட்சி தலைவர் மற்றும் சுற்று வட்ட கிராமங்கள் கூட்டமைப்பு சார்பாக மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் நகல் | நகல் |
| 3. | வா.சா.ஆ.3 | 20.02.2008 | வெள்ளிமலை பேரூராட்சி தலைவர் அவர்களால் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் நகல் | நகல் |
| 4. | வா.சா.ஆ.4 | - | தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் நீர் வளம் குறித்த விழிப்புணர்வு ஏடு | தகவல் ஏடு |
| 5. | வா.சா.ஆ.5 | - | சாத்தன் விளை, இளையான் விளை, மாவினள ஆழ்த்துளை கிணறுகள் மற்றும் கிணறுகள் பற்றிய தொகுப்பு | நகல் |
| 6. | நீ.ம.சா ஆ.1 | - | நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை நீ.ம.சா ஆ.1 | நகல் |

**3. பிரதிவாதி தரப்பு சாட்சிகள் - இல்லை**

**4. பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் - இல்லை**